**தேர்தல் பத்திரங்கள் மற்றும் அரசியல் நிதியில் வெளிப்படையில்லா நிலை:**

A. தேர்தல் பத்திரங்கள் என்றால் என்ன?

தேர்தல் பத்திரம் என்பது அரசியல் கட்சிகளுக்கு நன்கொடைகள் வழங்குவதற்கான ஒரு நிதி கருவியாகும். இது மத்திய பட்ஜெட்டில் 2017-18 ஆம் ஆண்டில் நிதியமைச்சரால் முதலில் அறிவிக்கப்பட்டது. தேர்தல் பத்திரத் திட்டம், 2018 இன் படி, தேர்தல் பத்திரம் என்பது உறுதிமொழி அடிப்படையில் வழங்கப்பட்ட ஒரு பத்திரமாகும். இதில் வாங்குபவரின் அல்லது பணம் செலுத்துபவரின் பெயர் இருக்காது. அந்த பத்திரத்தை வைத்திருப்பவர் (அதாவது அரசியல் கட்சி) அதன் உரிமையாளராக கருதப்படுகிறார்.

ஜனவரி 2, 2018 அன்று அறிவிக்கப்பட்ட இந்த திட்டம், தனிநபர்கள் (இந்திய குடிமக்கள்) மற்றும் உள்நாட்டு நிறுவனங்கள் இந்த பத்திரங்களை - ரூ .1,000, ரூ 10,000, ரூ 1 லட்சம், ரூ. 10 லட்சம் மற்றும் ரூ.1 கோடி மதிப்பில் வாங்கி, அவர்கள் விரும்பும் அரசியல் கட்சிகளுக்கு, நன்கொடையாக வழங்க அனுமதிக்கிறது. அவற்றை 15 நாட்களுக்குள் அரசியல் கட்சிகள் பணமாக மாற்றி கொள்ள வேண்டும். ஒரு தனி நபர் மற்ற நபர்களுடன் தனித்தனியாக அல்லது கூட்டாக பத்திரங்களை வாங்க முடியும். ஒரு நபர் (கார்ப்பரேட் நிறுவனங்கள் உட்பட) வாங்கக்கூடிய தேர்தல் பத்திரங்களின் எண்ணிக்கையில் வரம்பு இல்லை. பதினைந்து நாட்களுக்குள் பணமாக மாற்றாத பத்திரங்கள் அந்த வங்கியால் பிரதமர் நிவாரண நிதிக்கு டெபாசிட் செய்யப்படும். இதுவரை, மொத்தம் ரூ.20.2833 கோடி (0.31%) மதிப்பிலான 144 பத்திரங்கள் பிரதமர் நிவாரண நிதிக்கு இவ்வாறு சென்றுள்ளது. பதினைந்து கட்டங்களாக வாங்கிய 99.69% பத்திரங்கள் செல்லுபடியாகும் காலத்திற்குள்ளேயே அரசியல் கட்சிகளால் பணமாக மாற்றிக்கொள்ளப்பட்டன.

பின்வரும் நிபந்தனைகளை பூர்த்தி செய்யும் அரசியல் கட்சிகள் மட்டுமே தேர்தல் பத்திரங்களைப் பெற தகுதியுடையவை - (i) மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம், 1951 இன் பிரிவு 29ஏ இன் கீழ் பதிவு செய்யப்பட்ட கட்சி மற்றும் (ii) கடைசியாக நடத்தப்பட்ட மக்களவை அல்லது சட்டமன்றத் தேர்தலில் பதிவான வாக்குகளில் ஒரு சதவீதத்திற்கும் குறையாமல் வாக்குகளைப் பெற்ற கட்சி.

தேர்தல் பத்திரங்கள் மூலம் பெறப்படும் எந்தவொரு தொகையையும், கொடுக்கும் நன்கொடையாளர்களின் பெயர் அடையாளத்தோடு, ஆண்டுதோறும் இந்திய தேர்தல்

ஆணையத்திற்கு (ECI) அறிக்கை அளிக்க வேண்டும் என்ற மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம், 1951 இன் பிரிவு 29 சி நீக்கப்பட்டுள்ளது.

B. **ஜனநாயக சீர்திருத்தங்களுக்கான சங்கத்தின்** (ADR) **தேர்தல் பத்திரங்களின் மீதான பகுப்பாய்வு**

அரசியல் கட்சிகளால் வாங்கப்பட்ட மற்றும் மீட்கப்பட்ட தேர்தல் பத்திரங்களின் மொத்த எண்ணிக்கை மற்றும் மதிப்பை, கிளை வாரியாக மற்றும் பிரிவு வாரியாக, மார்ச் 2018 முதல் ஜனவரி 2021 வரை பதினைந்து கட்டங்களில் ஜனநாயக சீர்திருத்த சங்கம் (ADR) ஆய்வு செய்தது. ஆரம்பக்கட்ட முடிவுகள் -

1. மார்ச் 2018 முதல் 2021 ஜனவரி வரை பதினைந்து கட்டங்களாக ரூ. 6534.78 கோடி மதிப்புள்ள மொத்தம் 12,924 தேர்தல் பத்திரங்கள் விற்கப்பட்டுள்ளன. இந்த காலகட்டத்தில் ரூ. 6514.50 கோடி மதிப்புள்ள 12,780 பத்திரங்கள் மீட்கப்பட்டன. தேர்தல் பத்திரங்களின் மொத்த மதிப்பில் 55.43% இரண்டு மாதங்களில் மட்டும் வாங்கப்பட்டது - மார்ச் மற்றும் ஏப்ரல் 2019 - பொதுத் தேர்தல்களின் காலம்.

2. வாங்கிய பத்திரங்களின் மொத்த மதிப்பில் 92.046% அல்லது ரூ. 6015 கோடி ரூ .1 கோடி மதிப்பில் இருந்தது, இந்த பத்திரங்கள் தனிநபர்களைக் காட்டிலும் நிறுவனங்களால் வாங்கப்படுகின்றன என்பதை இது குறிக்கிறது.

3. மார்ச் 2018 முதல் ஜனவரி 2021 வரை மீட்கப்பட்ட மொத்த தேர்தல் பத்திரங்களில் ரூ. 5013.52 கோடி அல்லது 76.96% மதிப்புள்ள 9108 தேர்தல் பத்திரங்கள் தேசிய கட்சிகளின் தலைமையகம் அமைந்துள்ள புதுடில்லியில் காசாக்கப்பட்டுள்ளன. (அதே நேரத்தில் அதிக மதிப்புள்ள பத்திரங்கள் மும்பையில் வாங்கப்பட்டன என்பதையும் குறிப்பிட்டாக வேண்டும்).

4. 2017-18 மற்றும் 2018-19 நிதியாண்டுகளில், அரசியல் கட்சிகள் தேர்தல் பத்திரங்களிலிருந்து மொத்தம் ரூ. 2,760.20 கோடியைப் பெற்றன. இதில் 60.17% அல்லது ரூ .1,660.89 கோடி ஆளும் கட்சியால் பெறப்பட்டது.

5. தேர்தல் ஆணையத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பாஜகவின் ஆண்டு தணிக்கை அறிக்கையின்படி, 2017-18 நிதியாண்டில் தேர்தல் பத்திரங்கள் வடிவில் கட்சிக்கு ரூ. 210 கோடி நன்கொடை கிடைத்துள்ளது. இது 2017-18 ஆம் ஆண்டில் வாங்கப்பட்ட அனைத்து தேர்தல் பத்திரங்களிலும் 95% ஆகும். 2018-19 நிதியாண்டில், பாஜக ரூ. 1,450

கோடி மதிப்புள்ள தேர்தல் பத்திரங்களையும், இந்திய தேசிய காங்கிரஸ் ரூ. 383 கோடி மதிப்புள்ள தேர்தல் பத்திரங்களையும் பெற்றுள்ளது.

6. மக்களவை தேர்தல் 2019 இல் ,அரசியல் கட்சிகள் மொத்த தேர்தல் பத்திரங்களில் 68.08% தேர்தல் பத்திரங்களை மூன்று மாதங்களில் மீட்டது. மார்ச் 2019 (கட்டம் 8), ஏப்ரல்2019 (கட்டம் 9), மே 2019 (கட்டம் 10).

7. இத்தகைய வெளிப்படையற்ற தேர்தல் பத்திரத் திட்டத்தால், 2018-19 நிதியாண்டிற்கான தேசிய கட்சிகளின் மொத்த வருமானத்தில் 52% க்கும் மேலான, மற்றும் பிராந்திய கட்சிகளின் மொத்த வருமானத்தில் 53.83% தேர்தல் பத்திரங்கள் மூலம் பெறப்பட்ட நன்கொடைகளிலிருந்து வந்துள்ளது. இதுவே மிகவும் பிரபலமான நன்கொடை திட்டமாக பின்பற்றப்பட்டுள்ளது.

8. 2018-19 நிதியாண்டில், பாஜக, காங்கிரஸ், தேசியவாத காங்கிரஸ் கட்சி மற்றும் திரிணாமுல் காங்கிரஸ் ஆகிய 4 தேசிய கட்சிகள் மொத்தம் ரூ. 190.68 கோடி பெற்றதாக அறிவித்துள்ளன; 7 பிராந்திய கட்சிகள் அதாவது பிஜு ஜனதா தளம் (பிஜேடி), தெலுங்கானா ராஷ்டிர சமிதி (டிஆர்எஸ்), ஒய்.எஸ்.ஆர்-சி, சிவசேனா (எஸ்.எச்.எஸ்), தெலுங்கு தேசம் கட்சி (டி.டி.பி), மதச்சார்பற்ற ஜனதா தளம் (ஜே.டி.எஸ்) மற்றும் சிக்கிம் ஜனநாயக முன்னணி (எஸ்.டி.எஃப்) ஆகியவை தேர்தல் பத்திரங்கள் மூலம் ரூ. 578.49 கோடியை நன்கொடையாகப் பெற்றன.

9. 2019-20 நிதியாண்டில், ஏஐடிசி, பிஜேடி, ஜே.டி.எஸ், டி.டி.பி, ஏ.ஐ.ஏ.டி.எம்.கே, எஸ்.ஏ.டி, டி.எம்.கே மற்றும் ஜேடியு ஆகியவை தேர்தல் பத்திரங்கள் மூலம் மொத்தம் 311.37 கோடி ரூபாய் நன்கொடையாகப் பெற்றுள்ளன.

10. 2018-19 நிதியாண்டில் தேசிய கட்சிகள் அதிகபட்சமாக ரூ. 881.26 கோடி பெருநிறுவன நன்கொடைகளைப் பெற்றுள்ளன. இந்த தொகை 2016-17 நிதியாண்டில் ரூ. 563.19 கோடியாகவும், 2014-15 நிதியாண்டில் ரூ. 573.18 கோடியாகவும் இருந்தது (அப்போது 16 வது மக்களவைத் தேர்தல் நடைபெற்றது). 2012-13 மற்றும் 2018-19 நிதியாண்டுகளுக்கு இடையில், நிறுவனங்களிலிருந்து தேசிய கட்சிகளுக்கு நன்கொடைகள் 974% அதிகரித்துள்ளன.

C. ஏன் தேர்தல் பத்திர திட்டம், 2018 தன்னிச்சையானது, அரசியலமைப்பிற்கு முரணானது மற்றும் சிக்கலானது:

1. நிதிச் சட்டம் 2017, தேர்தல் பத்திரங்களின் முறையை அறிமுகப்படுத்தியது.
தேர்தல் நிதி, பண (Money Bill) மசோதாவாக நிறைவேற்றப்பட்டதன் மூலமாக கொண்டுவரப்பட்ட திருத்தங்கள், அரசியல் கட்சிகள் நன்கொடையாளர்களின் பெயர்களையும் முகவரிகளையும் குறிப்பிட தேவையில்லை என்ற நிலை உருவானது. தேர்தலில் தாக்கல் செய்யப்பட்ட வரவு, செலவு அறிக்கைகளில் தேர்தல் பத்திரங்கள் மூலம் ஆண்டு அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது. இது வெளிப்படைத்தன்மைக்கு ஒரு பெரிய சவாலாக அமைகின்றது. அரசியல் கட்சிகள் அவை வாங்கும் நன்கொடைகள் பற்றிய விவரங்கள் தெளிவாக வெளிவராத சூழல் உண்டானது.

2. தேர்தல் பத்திரங்கள் குடிமக்களின் அடிப்படை உரிமைகளில் ஒன்றான தகவல் அறியும் உரிமையை (Right to information, RTI) மீறுகின்றன. இத்தகைய செயல் நியாயமற்றது.
பெரிய பொது நலனுக்காக செலவிடும் தகவல்களை, தெரிந்து கொள்ள முடியாதபடி பகுத்தறிவற்ற கட்டுப்பாடு கடுமையான அடிமையாக்கும் முறையாகும்.
வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறல் இல்லாமல் போகும்.
முக்கியமான பொதுத் தகவல்களைத் தடுத்து நிறுத்துவதன் மூலம் பதிலளித்தல் மற்றும் கணக்கிடுதல் ஆகியவற்றை நீர்த்துப் போக செய்கிறது.
தேர்தல் பத்திர சட்டம் 'ஜனநாயகம் மற்றும் சட்டத்தின் ஆட்சி' என்பதற்கு எதிராக உள்ளது.

3. மேலும், தேர்தல் பத்திரங்கள் குடிமக்களுக்கு எந்த விவரங்களையும் அளிக்கவில்லை , ஆனால் அதிகாரத்தில் உள்ள அரசியல் கட்சி இந்த விவரங்களை பெறலாம். அரசாங்கம் (ஆளும் கட்சி) ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா (SBI) விடம் தகவல்களை கேட்டு பெறமுடியும்.

4. உச்சவரம்பற்ற மற்றும் மர்மமான நன்கொடைகளின் மூலமாக தேர்தல் மற்றும் அரசியல் செயல்பாட்டில் சட்டவிரோத பணத்தை சட்டப்பூர்வமாக்குவது நடைபெறுகிறது. இவ்வாறு ரூ . 6500 கோடி மாற்றப்பட்டு உள்ளது.

5. ரிசர்வ் வங்கி ,தேர்தல் ஆணையம், சட்ட அமைச்சகம் போன்ற பல்வேறு மத்திய அமைப்புகள் மேலும் மாநிலங்களவையின் பல்வேறு பாராளுமன்ற உறுப்பினர்கள்

தங்கள் அச்சத்தை வெளிப்படுத்தியதோடு மட்டுமல்லாமல், தேர்தல் பத்திர திட்டத்திற்கு எதிராக அரசாங்கத்திற்கு பலமுறை எச்சரிக்கைகள் விடுத்தனர்.
இது கருப்பு பண புழக்கத்தை அதிகரிக்கும். தேர்தல் பத்திரங்கள் "மோசமான முன்மாதிரி" என்று குறிப்பிட்டனர். ஆனால் இந்த ஆட்சேபனைகள் புறக்கணிக்கப்பட்டன.

6. அரசியல் கட்சிகள் தேர்தல் பத்திரங்கள் பெறும் நன்கொடை விவரங்களை அறிக்கையாக அளிக்கத்தேவையில்லை என்ற நிலை பிற்போக்கான ஒரு செயல் என்று இந்தியா தேர்தல் ஆணையமே தெரிவித்துள்ளது. இதனால், அரசியல் கட்சிகள், அரசாங்கத்திடமிருந்து அல்லது வெளிநாட்டு நிறுவனங்களிடமிருந்து நன்கொடை பெற்றுள்ளதா என்பதைக் கண்டறிய இயலாத சூழல் ஏற்படுகிறது என்றும் தேர்தல் ஆணையம் தெரிவித்தது. தேர்தல் ஆணையம் இப்படி ஒரு எச்சரிக்கையை தெரிவிக்கவே இல்லை என மத்திய அரசு மாநிலங்களவையில் பொய் சொன்னது. மட்டுமல்லாமல், தேர்தல் பத்திரங்கள் முறையை நன்கொடையாளர்கள் விரும்புகிறார்கள் என்றும் தெரிவித்தது.

7. ரூ. 20 கோடி மதிப்புள்ள காலாவதியான தேர்தல் பத்திரங்களை எஸ்பிஐ ஏற்றுக்கொள்ள அரசாங்கம் வலியுறுத்தியுள்ளது.

8. தேர்தல் பத்திரங்கள், மேல் வலது மூலையில் மறைக்கப்பட்டுள்ள தனித்தன்மை வாய்ந்த எண்ணெழுத்துகளை கொண்டுள்ள பத்திரங்கள் ஆகும். இது புற ஊதா ஒளியில் மட்டுமே தெரியும். வெறும் கண்களால் பார்க்க முடியாது.
அரசு எப்போது வேண்டுமானாலும் நன்கொடை பற்றிய தகவல்களை எஸ்பிஐ டம் (SBI) கேட்கலாம். ஆனால் எதிர்க்கட்சி மற்றும் இந்திய மக்களுக்கு நன்கொடை பற்றி அறிந்துகொள்ள இயலாத சூழல் ஏற்பட்டுள்ளது .

9. இந்திய முன்னாள் தேர்தல் ஆணையர் திரு. எஸ்.ஒய் குரைஷி ஒரு நேர்காணலில் சொன்னது. 'தேர்தல் பத்திரத்தை வாங்கும் போது, ஒருவர் தங்கள் KYC விவரங்களை வழங்க வேண்டும். வரிசை எண் KYC விவரங்களுடன் பொருந்திய பத்திரம், யார் எந்த அரசியல் கட்சிக்கு எவ்வளவு பணத்தை நன்கொடையாக வழங்கினார் என்பதை தெளிவாக வெளிப்படுத்தும்' என்றார்.

10. அங்கீகரிக்க படாத தேர்தல் பத்திரங்களை சட்டமன்ற தேர்தல்களில் விற்பனை செய்ய அனுமதி வழங்கியதின் மூலமாக நிதி அமைச்சகம் தனது விதிகளை மீறியுள்ளது .

11. பொதுவாக ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர் ஆகிய மாதங்களில் 10 நாட்களுக்கு தேர்தல் பத்திரங்கள் வழங்கப்படும்.
தேர்தல் நடைபெறும் ஆண்டில் கூடுதலாக 30 நாட்கள் வழங்கப்படுகின்றன. எனினும் 2019ல் பிப்ரவரி மாதம் நடைபெற இருந்த மக்களவை தேர்தலுக்கு முன்பு, மார்ச், ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் மொத்தம் 45 நாட்கள் தேர்தல் பத்திரங்களை வழங்கலாம் என நிதி அமைச்சகம் முடிவு செய்தது.
அதேசமயம் ஏற்கனவே அனுமதிக்கப்பட்டுள்ள அந்த 30 நாட்களுடன் தொடர்புடைய மார்ச் மற்றும் மே மாதங்களில் தேர்தல் பத்திரங்களை வழங்குவதற்கான நாட்கள் நிர்ணயிக்கப்பட்டன. ஆனால் ஏப்ரல் 12, 2019 ம் தேதி பத்திரங்களை விற்பனை செய்வதற்கும் வாங்குவதற்கும் அமைச்சகத்திற்கு கூடுதலாக வழங்கப்பட்ட 5 நாட்களை நீக்கக் கூறி உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது.

12. தேர்தல் பத்திரங்கள் மூலம் வழங்கப்படும் நன்கொடைகள் தேர்தலுக்கு முக்கிய பங்கு வகிக்கின்றன என்பது தெளிவாகிறது
அரசியல் கட்சிகளின் பிரச்சாரங்கள், நிதி தொடர்பான தகவல்களை அணுகுவதை மீண்டும் வலியுறுத்துகின்றன
அரசியல் கட்சிகளின் வெளிப்படையான மற்றும் தகவலறிந்த வாக்களிப்பு மற்றும் சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தல்கள் உறுதி செய்வதில் ஒருங்கிணைந்ததாகும்

13.மக்களவை அல்லது மாநில சட்டமன்றத் தேர்தல்களில் 1% வாக்குகளைப் பெற்றிருக்கும் கட்சிகள் மட்டுமே இந்த திட்டத்திற்கு தகுதியானது என்ற நிதி அமைச்சகத்தின் நிபந்தனையை சட்ட அமைச்சகம் பலமுறை எதிர்த்தது. சட்ட அமைச்சகம் தொடர்ந்து வலியுறுத்தியதால் மக்கள் பிரதிநிதித்துவ சட்டம், 1951 உடன் இணைக்கப்பட்டது.

14. பெரும்பான்மையான பத்திரங்கள் ஒரு கட்சியினால் தேர்தலின் போது பெறப்பட்டன என்ற உண்மை, அரசியல் கட்சிகளிடையே சம போட்டி இல்லை என்பதையே உணர்த்துகிறது. இது ஜனநாயகத்தை மிகக் கடுமையாக பாதிக்கும்.

15. தேர்தல் பத்திரங்களின் மூலம் பெறப்படும் நன்கொடைகள் வெளிப்படையாக இல்லாத ஒரு சூழ்நிலையில், அரசியல் கட்சிகள், மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம், 1951

இன் விதிகளை மீறி, வெளிநாட்டிலிருந்தோ, அரசு நிறுவனங்களிடமிருந்தோ நன்கொடைகள் பெற்றனவா என்பதை அறிந்து கொள்ளவே இயலாது.

16. தகுதியற்ற அரசியல் கட்சிகளும் தேர்தல் பத்திரங்கள் மூலம் நிதியுதவி பெற்றுள்ளன. ஈ.சி.ஐ.க்கு விவரங்களை சமர்ப்பித்த அரசியல் கட்சிகளின் தகுதி குறித்து ஏ.டி.ஆர் ஆய்வு செய்தது. பகுப்பாய்வின் கண்டுபிடிப்புகள் திட்டத்தை நிறைவேற்றுவது குறித்து பல்வேறு கேள்விகளை எழுப்பின .

✓ ECI க்கு விவரங்களைச் சமர்ப்பித்த 69 பதிவு செய்த அங்கீகரிக்கப்படாத கட்சிகளில் மொத்தம் 43 கட்சிகள் மட்டுமே, தாங்கள் பெற்ற வாக்கு சதவிகிதங்களை தெரிவித்துள்ளனர்.

✓ பகுப்பாய்வு செய்யப்பட்ட 43 கட்சிகளில் ஒரேயொரு அங்கீகரிக்கபடாத ஆனால் பதிவு செய்த கட்சி மட்டுமே, 2018 தேர்தல் பத்திரத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதி அளவுகோல்களின்படி, தேர்தல் பத்திரங்களைப் பெற தகுதியுடையவர் என கண்டறியப்பட்டது.

✓ தேர்தல் பத்திர திட்டத்தின் படி, தேர்தல் பத்திரங்களின் மூலம் நன்கொடைகளை பெற தகுதியான அரசியல் கட்சிகள் குறித்த எந்த பட்டியலும் ECI இன் வலைத்தளத்தில் இல்லை . 2017 அக்டோபர் 10, தேதியிட்ட ADR இன் RTI விண்ணப்பத்திற்கு பதில் அளிக்கையில், அப்படி ஒரு பட்டியலை நாங்கள் தொகுக்கவில்லை என ECI தெரிவித்தது.

✓ 2018 தேர்தல் பத்திர திட்டத்திற்கு கீழ் எந்த நிலையிலும் எந்தவொரு அதிகாரத்தினாலும் அரசியல் கட்சிகளால் பெறப்பட்ட தேர்தல் பத்திர நன்கொடைகள் தொடர்பான ஆய்வுகள் நடத்தப்படவில்லை என்பது தெளிவாகிறது.

17. தேர்தல் பத்திரத் திட்டம் ஆரம்பித்த பின்னர் இந்தியாவில் அரசியல் கட்சிகளின் எண்ணிக்கை பன்மடங்கு அதிகரித்துள்ளது. ஏற்கனவே பணம் மற்றும் அரசியல் கட்சிகளின் அதிகாரத்திற்கும் இடையில் ஒரு பரவலான தொடர்பு உள்ளது. தேர்தல் பத்திரங்கள் அரசியல் கட்சிகளை கருப்பு பணத்திற்கான பேராசைக்கு ஒப்புதல் அளித்து ஊக்குவித்துள்ளன. எனவே பணம் மற்றும் அதிகாரம் உள்ளவர்கள் மட்டுமே தேர்தலில் போட்டியிடுவதற்கான வாய்ப்பைப் பெறுவார்கள். ஜனவரி, 2017 இல், இந்தியாவில் மொத்தம் 1500 அரசியல் கட்சிகள் இருந்தன. ஆனால் செப்டம்பர் 30, 2020 நிலவரப்படி, இந்தியாவில் மொத்த அரசியல் கட்சிகளின் எண்ணிக்கை 2,628 ஆக உயர்ந்துள்ளது. அரசாங்கத்தின் சர்ச்சைக்குரிய தேர்தல் பத்திரங்கள் மீதான சந்தேகத்தினையும் வரம்பற்ற மற்றும் அபரிமிதமான கார்ப்பரேட் நன்கொடைகளையும் புதிய கட்சிகளின் இந்த படையெடுப்பு தெளிவாக சுட்டிக்காட்டுகிறது . இந்த பெரும்பான்மையான கட்சிகள் ஒருபோதும் தேர்தலில்

போட்டியிட மாட்டார்கள். தங்கள் கறுப்புப் பணத்தை வெள்ளையாக மாற்ற மட்டுமே, இந்த பத்திரங்களை பயன்படுத்துகின்றனர்.

18.மக்களவை 2019 தேர்தல் தான் 'இதுவரை எங்கும் இல்லாத அளவுக்கு விலை உயர்ந்த தேர்தல்,'55,000-60,000 கோடி ரூபாய் செலவிடப்பட்டதாக மதிப்பிடப்பட்டுள்ளது
2019 நாடாளுமன்றத் தேர்தலின் போது. ஒட்டுமொத்தமாக, 1998 மற்றும் 2019 க்கு இடையிலான கடந்த ஆறு மக்களவைத் தேர்தல்களில் செலவினங்களை 'ஊடக ஆய்வுகள் மையம் (சிஎம்எஸ்)' அறிக்கை தாக்கல் செய்தது. அதன்படி லோக் சபா தேர்தல் செலவினம் 1998 ல் ரூ. 9,000 ஆக இருந்து 2019 ல் ஆறு மடங்காக ரூ. 55,000 கோடி உயர்ந்துள்ளது.

19. 2019 லோக் சபா தேர்தலின் போது, தேர்தல் பத்திரங்களின் மூலம் மிக அதிக நிதியுதவி பெறப்பட்டதற்கான ஆதாரங்கள் உள்ளன. 2017-18 மற்றும் 2018-19 க்கு இடையில், அரசியல் கட்சிகள் தேர்தல் பத்திரங்களில் இருந்து மொத்தம் 2,760.20 ரூபாய் பெற்றுள்ளன.

D.ஜனநாயக சீர்திருத்தச் சங்கத்தின் ( ADR)பரிந்துரைகள்:

1.தேர்தல் பத்திர திட்டம் 2018 ,முழுவதுமாக ரத்து செய்யப்பட வேண்டும் என்று ADR (ADR) முன்மொழிகிறது.

2., திட்டம் தொடருமாயின், பத்திர நன்கொடையாளரின் விவரங்களை தெரிவிக்க வேண்டியதில்லை என்ற கொள்கையை தேர்தல் பத்திரத் திட்டம் 2018 இல் இருந்து அகற்ற வேண்டும். அனைத்து அரசியல் கட்சிகளும் தேர்தல் பத்திரங்கள் மூலம் நன்கொடைகளை அளிக்கும் அவர்களின் நன்கொடையாளரின் விவரங்களை அறிவிக்க வேண்டும். கொடுக்கப்பட்ட நிதியாண்டில் பெறப்பட்ட அத்தகைய நன்கொடைகளின் மொத்தத் தொகையையும் தெரிவிக்க வேண்டும். மேலும்,
ஒவ்வொரு பத்திரத்திற்கும் எதிராக நன்கொடையாளர்களின் விரிவான விவரங்கள், ஒவ்வொரு பத்திரத்தின் அளவு மற்றும் ஒவ்வொரு பத்திரத்திற்கும் எதிராக பெறப்பட்ட கடனின் முழு விவரங்களும் வெளியிட வேண்டும். இவ்வாறு அரசியல் கட்சிகளின் நிதி நிலை பொது மக்களுக்கு வெளிப்படையாக இருக்க வேண்டும்..

3. தேர்தல் பத்திரங்கள் மூலம் நன்கொடைகளைப் பெற தகுதியான அனைத்து அரசியல் கட்சிகளின் பட்டியல், தேர்தல் பத்திர திட்டம், 2018 இல் குறிப்பிடப்பட்டுள்ள தகுதி அளவுகோல்கள் தொகுக்கப்பட வேண்டும். கடைசியாக கட்சிகள் பெற்ற வாக்குப் பங்கின் அடிப்படையில் தொடர்ந்து புதுப்பிக்கப்பட்டு பின்பற்ற வேண்டும்.
மக்களவை பொதுத் தேர்தல் அல்லது மாநில சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட்டது போன்ற தகவல்கள் வலைத்தளங்களின் மூலம் பொது களத்தில் கிடைக்க வேண்டும்.

4. முறையாக தகவல்கள் வெளிப்படுத்தாத கட்சிக்கு, வரி சலுகைகளை நீக்குவது மட்டுமல்லாமல், கடும் அபராதமும் விதிக்க வேண்டும்.

5. நீண்ட காலமாக செயலற்ற நிலையில் இருக்கும் அரசியல் கட்சிகள், இதில் பங்கேற்க கூடாது. தேர்தலில் போட்டியிடவோ, தேர்தல் பத்திரங்கள் மூலம் நன்கொடைகளைப் பெறுவதையோ இந்திய தேர்தல் ஆணையம் (ECI) தடுக்க வேண்டும்.

6. தேர்தல் பத்திரம் மூலம் நிதி பெற தகுதியற்ற கட்சிகள் தேர்தல் பத்திரங்களை காசாக்காமல் பார்த்துக்கொள்ளும் பொறுப்பை இந்திய தேர்தல் ஆணையத்திடம் (ECI) ஒப்படைக்க வேண்டும்.

7. அனைத்து தேசிய மற்றும் பிராந்திய அரசியல் கட்சிகளும் நிதி குறித்த அனைத்து தகவல்களையும் வழங்க வேண்டும்.
தேர்தல் பத்திரங்கள் நன்கொடையாளர்களின் முழு விவரங்கள் தகவல் அறியும் உரிமையின் கீழ் பொது ஆய்வுக்கு கிடைக்க வேண்டும்.

8. அரசியல் கட்சிகளால் சமர்ப்பிக்கப்படும் நிதி ஆவணங்களை, தலைமைக் கணக்குத் தணிக்கையாளர் (CAG) மற்றும் தேர்தல் ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்ட அமைப்பைக்கொண்டு ஆண்டுதோறும் ஆய்வு செய்ய வேண்டும்.

9. ஜீன் 3 ,2013 இல் தேதியிட்ட மத்திய தகவல் ஆணையத்தின் உத்தரவுக்கு இணங்க அரசியல் கட்சிகள் அனைத்தும் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005 இன் வரம்பிற்குள் கொண்டுவரப்பட வேண்டும்.

* * * * *